அசல் வழக்கு எண். 48/2013 தேதி-19.06.2025

வா.சா.1 - பிச்சையம்மாள்

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. காத்தானுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 ஆண் மக்கள் மற்றும் 4 பெண் மக்கள் உள்ளார்கள். காத்தான் மனைவி பெயர் தெய்வாணை ஆகும். எனக்கும் மாரியப்பனுக்கும் திருமணம் நடந்த தேதி என்ன என்றால் தேதி தெரியாது. எனக்கு 16 வயது இருக்கும் போதே திருமணமாகிவிட்டது. நான் மற்ற வாதிகளுக்காகவும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நானும் மற்ற வாதிகளும் குளித்தலை டவுன் மலையப்பன் நகரில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் மேல் நங்கவரத்தில் உள்ளது. 1, 2 பிரதிவாதிகளின் மகன் தான் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான். 3ம் பிரதிவாதிக்கு ஜகநாதன் என்ற உடன் பிறந்த சகோதரர் உள்ளாரா என்றால் உள்ளார்.

2. என் கணவர் இறந்த தேதி தெரியுமா என்றால் சரியாக நியாபகம் இல்லை. என் மகனுக்கும் 1ம் வாதி தங்கமணிக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் நியாபகம் இல்லை. ரோகினி , குருமூர்த்தி ஆகியோர் எப்போது பிறந்தார்கள் என்றால் 1994ல் ரோகிணியும், 1996ல் குருமூர்த்தியும் பிறந்தார்கள். எனது மகன் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்வசம் தான் உள்ளது நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். பிரதிவாதிகள் எங்கு குடியிருந்து வருகிறார்கள் என்றால் மேல் நங்கவரத்தில் குடியிருந்து வருகிறார்கள். தாவா 1ம் அயிட்ட விவசாய நிலம் சொந்த நிலமா என்றால் இல்லை. அது குத்தகை நிலமாகும். எனது மாமனார் காலத்தில் இருந்து நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம்.

3. அது யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் பெயர் சரியாக தெரியாது. ஆனால் செட்டி பண்ணை என்று கூறுவது வழக்கம். எனது வழக்குரையில் செட்டி பண்னை இடம் என குறிப்பிடவில்லை என்றால் தெரியவில்லை. 1ம் அயிட்ட குத்தகை நிலத்திற்கு குத்தகைசெலுத்தியுள்ளோமா என்றால் குத்தகை செலுத்தியுள்ளோம். அதற்காக இரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எந்த வருடம் குத்தகை செலுத்தப்பட்டது என்றால் எனக்கு வருடம் சரியாக நியாபகம் இல்லை. இரசீதாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எத்தனை

வருடங்களுக்கு முன்னர் குத்தகை செலுத்தினேன் என்றால் சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு வரை குத்தகை செலுத்தி வந்தேன். வருட குத்தகை எவ்வளவு என்றால் சரியாக நியாபகம் இல்லை.

4. இரசீது மட்டும் வாங்கியுள்ளேன். நான் சொல்வது போல் குத்தகை நிலத்திற்கு குத்தகை செலுத்தியதாகவும், இரசீது பெற்றுள்ளதாகவும் கூறுவது பொய் என்றால் சரியல்ல. 1ம் அயிட்ட சொத்தின் பட்டா எண் என்றால் நியாபகம் இல்லை. இரண்டு பட்டா வரும். ஆனால் பட்டா எண் நியாபகம் இல்லை. மேற்படி பட்டாக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனக்கும் மற்ற வாதிகளுக்கும் பொது ஆவணங்களான குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை ஆகிவற்றின் முகவரி குளித்தலை டவுன் மலையப்பன் நகர் என்று தான் உள்ளது என்றால் சரிதான். காத்தான் எப்போது இறந்தார் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. காத்தானின் மனைவி எப்போது இறந்தார் என்றால் எனது மாமனார் காத்தான் இறப்பிற்கு பின்னிட்டு அவர் இறந்தார். தேதி சரியாக நியாபகம் இல்லை.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**